# பாடம் 1 : தமிழின் இனிமை

**வகுப்பு : V**

**பாடம் : தமிழ்**

## அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக

1. “கழை” இச்சொல் உணர்த்தும் சரியான பொருள்

   விடை: கரும்பு

2. கனியிடை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   விடை: கனி + இடை

3. பனி + மலர் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   விடை: பனிமலர்

## ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. கழையிடை - கழை + இடை
2. என்னுயிர் - என் + உயிர்

## இ. பொருத்துக.

1. பால் - பசு
2. சாறு - கரும்பு
3. இளநீர்- தென்னை
4. பாகு - வெல்லம்

AAMSKOSAVAPATTY

## ஈ. இப்பாடலில் வரும் ஒரே ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுக

1. கனியிடை - கழையிடை
2. பாலும் - தேனும்

## உ. பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் உள்ள சொற்களை எடுத்து எழுதுக.

1. கனியிடை - பனிமலர்
2. நனிபசு - இனியன

## ஊ. பாடலில் வரும் வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக

1. தென்னை
2. தேன்
3. வெல்லப்பாகு
4. பால்

## எ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. பாரதிதாசன் எவற்றையெல்லாம் இனியன என்று கூறுகிறார்?

- பலாச்சுளை
- கரும்புச்சாறு
- தேன்

AAMS KOSAVAPATTY

- பாகு
- பசுவின்பால்
- இளநீர்

இவற்றையெல்லாம் பாரதிதாசன் இனியன என கூறுகிறார்.

2. பாரதிதாசன் எதனை என் உயிர் என்று கூறுகிறார்?

பாரதிதாசன் தமிழை என் உயிர் என்று கூறுகிறார்

## ஏ. சிந்தனை வினா

1. பாரதிதாசன் சிலவற்றை இனியன என்று கூறுகிறார். உனக்கு எவையெல்லாம் இனிமையானவை? ஏன்?

1. மேகங்கள் தவழ்ந்து விளையாடும் மலைமேகமும்
2. நறுமணம் வீசும் பூக்களும்
3. கடல் அலையும்
4. பச்சை பசேல் என்று காட்சியளிக்கும் வயல்வெளிகளும்

எல்லாம் எனக்கு இனிமையானவை. ஏனென்றால், இவை அனைத்தும் இயற்கை வளங்கள் ஆகும்.

AAMS KOSAVAPATTY

### பாடம் 1 : உரைநடை - அறிவா? பண்பா? பட்டிமன்றம்

## அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக

1. "நற்றமிழ்" இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது.

விடை: நன்மை + தமிழ்

2. உலகம் என்னும் சொல்லை குறிக்காத பொருள்

விடை: வானம்

3. அறிவு + ஆயுதம் என்பதை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

விடை: அறிவாயுதம்

4. புகழ் இச்சொல்லின் எதிர்ச்சொல்

விடை: அறிவாயுதம்

5. வெளிச்சம் - இச்சொல்லைக் குறிக்காத சொல்

விடை: இருள்

## ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. செந்தமிழ் - செம்மை + தமிழ்
2. கவியரங்கம் - கவி + அரங்கம்

## இ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. அறிவால் உயர்ந்தவர்களாக இன்சுவை யார் யாரைக் குறிப்பிடுகிறார்?

அறிவால் உயர்ந்தவர்களாக இன்சுவை குறிப்பிடுவது

- அப்துல்கலாம்
- தாமஸ் ஆல்வா எடிசன்

AAMS KOSAVAPATTY

2. பண்பால் சிறந்தவர்களாக மதியொளி எவரையெல்லாம் குறிப்பிடுகிறார்?

பண்பால் சிறந்தவர்களாக மதியொளி குறிப்பிடுவது

- புத்தர்
- திருவள்ளுவர்

3. உயிர் காக்கும் நெல்லிக்கனியை யார், யாருக்குக் கொடுத்தார்?

உயிர் காக்கும் நெல்லிக்கனியை அதிமான், ஔவையாருக்குக் கொடுத்தார்.

4. நடுவர் கூறிய தீர்ப்பை உன் சொந்த நடையில் கூறுக?

அறிவும், பண்பும் கண்ணின் இரு விழிகள் போன்றவை. ஐம்பொறிகள் பண்பாகவும், உலகம் முழுவதும் அறிவாகவும் கொண்டு நாம் செயல்பட வேண்டும். எனவே இவை இரண்டுமே சிறப்பு என்று நடுவர் தீர்ப்பு கூறினார்.

5. ஐம்பொறிகளுள் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற நான்கையும் எழுதுக.

கண், காது, மூக்கு, வாய், தோல்

6. தமிழைச் சிறப்பிக்கும் பெயர்களைப் பாடப்பகுதியிலிருந்து எடுத்தெழுதுக.

தமிழைச் சிறப்பிக்கும் பெயர்கள்

- செந்தமிழ்
- செகம் போற்றும் தமிழ்

AAMS KOSAVAPATTY

- நறுந்தேன்
- முத்தமிழ்
- நற்றமிழ்

## ஈ. சிந்தனை வினா

1. கல்வி, செல்வம், வீரம் இவற்றுள் எது சிறந்தது என நீ கருதுகிறாய்? ஏன்?

கல்வி, செல்வம், வீரம் இவற்றுள் கல்வியே சிறந்தது. ஏனெனில் செல்வம் அழிந்து விடும். வீரம் வயதானால் குறைந்து விடும், அழியாமல் குறையாமல் இருப்பது கல்வி மட்டுமே! எனவே கல்வியே சிறந்தது என்பேன்.

2. "வெறும் பண்பை வைத்துக்கொண்டு பெரும் பந்தல் போடலாமே?" - இத்தொடருக்கான பொருளை உம் சொந்தநடையில் வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.

பண்பை மட்டும் வைத்துக்கொண்டு பெரும் பந்தல் போட முடியாமல் போகலாம். ஆனால் வாழ்க்கைப் பந்தல் போடலாம்.

AAMSKOSAVAPATTY

## பாடம் 1 : என்ன சத்தம்

### அ. வினாக்களுக்கு விடையளி

**1. செழியன் ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிச் செல்லக் காரணம் என்ன?**

ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கு விடுமுறை என்பதால்,செழியன் தன் பாட்டியுடன் ஆடுகளை மேய்ச்சலுக்காக காட்டிற்கு ஓட்டிச் சென்றான்.

**2. செழியன் செய்தவற்றை உமது சொந்த நடையில் கூறுக.**

காட்டில் ஆடுகளை மேய விட்டு விட்டு ஒரு மரத்தடியில் அமர்ந்து இயற்கை அழகை இரசித்துக் கொண்டு இருந்தான். திடீரென ஆடுகள் கத்தத் தொடங்கின. செழியன் எழுந்து சென்று வபார்த்தான்.

புதர் அருகே நரி ஒன்று ஆடுகளை கொன்று தின்ன நேரம் பார்த்துக் கொண்டு இருந்தது. செழியன் அருகில் இருந்து குச்சியை வில்லாக்கி நரியை நோக்கி அம்மை எய்தான். அடிபட்ட நரி ஓடிவிட்டது.

### ஆ. வினாக்களுக்கு விடையளி

**1. நம்மைப்போல விலங்குகளுக்கும் பேசும் திறன் கிடைத்தால் எப்படி இருக்கும்? காட்டில் வாழும் விலங்குகள் பேசுவது போல் ஓர் உரையாடல் எழுதிக் காட்டுக.**

AAMSKOSAVAPATTY

மான்: ஏய் எல்லாம் ஓடுங்க, சிங்கம் வருது ஓடுங்க

முயல்: என்ன மான் அக்கா சொல்றீங்க?

மான்: அட குட்டிப் பயலே உண்மையைத்தான் சொல்றேன். ஒளிஞ்சுக்கோ

முயல் : சரி மான் அக்கா

சிங்கம்: ஏய் எல்லாரும் எங்க ஓடுறீங்க? நில்லுங்க, ஏய்! நில்லுங்க.

மான்: நிக்கமாட்டோம்! நீ எங்களை தின்னுடுவ! (என்று சொல்லி ஓடியது)

2. நீங்கள் செல்லமாக வளர்க்கும் நாய், பூனை போன்ற விலங்குகள் ஏதேனும் ஆபத்த நேர்வதற்கு முன்பு ஏன் ஒலியெழுப்புகிறத என எப்பொதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா?

சிந்தித்தது உண்டு. ஒரு நாள் எங்கள் வீட்டு நாய் நடு இரவில் மிகவும் குரைத்தது. அப்போது தான் திருடன் வந்ததை அறிந்தோம்.

AAMSKOSAVAPATTY

## புத்தகப் பயிற்சி மதிப்பீடு

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. நமது முன்னோர்கள் ஒரு சொல்லை சொல்லியவாறே நாமும் சொல்வது மரபு

2. யானை பிளிறும்

3. ஆந்தை அலறும் என்பது ஒலிமரபு

4. புலியின் இளமைப் பெயர் புலிப்பறழ்

5. பூப்பறித்தாள் என்பது வினைமரபு

## ஆ. ஒலி மரபுகளைப் பொருத்துக.

1. சிங்கம் - முழங்கும்
2. அணில் - கீச்சிடும்
3. மயில் - அகவும்
4. குயில் - கூவும்
5. குரங்கு - அலப்பும்

## இ. உயிரினங்களின் ஒலிமரபை எழுதுக.

1. மயில் - அகவும்
2. கிளி - பேசும்
3. குரங்கு - அலப்பும்
4. ஆடு - கத்தும்
5. குயில் - கூவும்
6. யானை - பிளிறும்

## ஈ. வினை மரபுகளைப் பொருத்துக.

1. நீர் - குடித்தான்

AAMS KOSAVAPATTY


2. முறுக்கு - தின்றான்

3. உணவு - உண்டான்

4. அம்பு - எய்தான்

5. பூ - பறித்தாள்

## உ. ஒலிமரபுச் சொற்களை எழுதுக.

| | |
|---|---|
|  | சீறும் |
|  | கீச்சிடும் |
|  | கூவும் |
|  | கரையும் |
|  | குரைக்கும் |
|  | முரலும் |

## ஊ. வினாக்களுக்கு விடையளிக்க

1. மரபு என்றால் என்ன?

நம் முன்னோர்கள் எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ. அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபு.

AAMS KOSAVAPATTY

2. பாடப்பகுதியில் எத்தனை வகையான மரபுச் சொற்கள் இடம்பெற்றுள்ளன?

- ஒலி மரபு,
- இளமைப் பெயர் மரபு,
- வினைமரபு,
- உறுப்புப் பெயர் மரபு,
- இருப்பிட மரபுச் சொற்கள்

என ஐந்து வகையான மரபுச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

3. ஒலி மரபிற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

குயில் - கூவும்

மயில் - அகவும்

நாய் - குரைக்கும்

ஆடு - கத்தும்

AAMS KOSAVAPATTY

## ஈ. எழுதுதல்

2. சொற்களை தொடரில் அமைத்து எழுதுக.

1. நல்லறிவு - நாம் நல்லறிவை பெற வேண்டும்.
2. தென்னைமரம் - தென்னைமரம் குளிர்ந்த இளநீரைத் தருகிறது
3. கவியரங்கம் - நான் கவியரங்கம் சென்றேன்.
4. நன்றி - நாய் நன்றி உள்ள விலங்கு.

**3. கீழ்க்காணும் சொற்றொடர்களைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.**

| | | |
|---|---|---|
| மேரி ஆடினாள் | ஈ பறந்தது | புலி உறுமியது |
| பாட்டி தும்மினார் | குழந்தை சிரித்தது | பூனை தூங்கியது |

1. குழந்தை என்ன செய்தது? குழந்தை சிரித்தது.
2. மேரி என்ன செய்தாள்? மேரி ஆடினாள்.
3. பாட்டி என்ன செய்தார்? பாட்டி தும்மினார்.
4. எது பறந்தது? ஈ பறந்தது
5. தூங்கியது எது ? பூனை தூங்கியது.
6. புலி என்ன செய்தது? புலி உறுமியது.

**4. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். நம் தாய்மொழியாம் தமிழ் காலத்தால் முந்தையது மட்டுமன்று; உலகின் முதன்மொழியும் ஆகும். வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை நம் தமிழ்மொழிக்கே உண்டு. தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்துபிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உயரிய தத்துவத்தை உலகுக்க உணர்த்தியது, நம்

AAMS KOSAVAPATTY

தமிழ்பண்பாடு. உலகமே வியந்து பார்க்கம் வளமான சொற்கள் உடையது நம் அன்னைத் தமிழ்மொழி.

1. தமிழ் என்னும் சொல்லின் பொருள் யாது?

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள்

2. உறவினர் என்னும் பொருள் தரும் சொல்லை பத்தியிலிருந்து எடுத்தெழுதுக.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

3. தமிழ்மொழியில் என்னென்ன இலக்கணப் பிரிவுகள் உள்ளன?

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்துபிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது.

4. தமிழ்ப் பண்பாடு உலகுக்கு உணர்த்திய உயரிய தத்துவம் யாது?

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உயரிய தத்துவத்தை உலகுக்க உணர்த்தியது, நம் தமிழ்பண்பாடு.

5. பிரித்து எழுதுக. தமிழிலக்கணம் - தமிழ் + இலக்கணம்

## 5. எடுக்காட்டில் உள்ளதுபோல் மாற்றி எழுதுக.

1. ஹேண்ரைட்ங் காம்பிடிசன்ல எனக்குப் ஃபர்ஸ்ட் பிரைஸ் கிடைத்தது.

கையெழுத்துப் போட்டியில் எனக்கு முதற்பரிசு கிடைத்தது.

2. ஃபஸ்ட் பீரியட் தமிழ் கிளாஸ் நடந்தது.

AAMSKOSAVAPATTY

முதல் பாடவேளை தமிழ் வகுப்பு நடந்தது.

3. நான் ட்ராயிங் நோட்டில் உள்ள பிச்சர்க்கு கலர் கொடுத்தேன்.

நான் வரைபடப் புத்தகத்தில் உள்ள படத்திற்கு வண்ணம் கொடுத்தேன்.

## 6. பொருத்தமான சொற்களால் பாடலை நிறைவு செய்க.

(உண்மை, பயிற்சி, பொறுமை, கல்லாமை, ஊக்கம், கல்வி, பொறாமை, முயற்சி)

1. ஊக்கம் உடையவன் மாணவன் பொறாமை அற்றவன் மாணவன்
2. கல்வி கற்பவன் மாணவன் கல்லாமை தவிர்ப்பவன் மாணவன்
3. பயிற்சி பெறுபவன் மாணவன் முயற்சி செய்பவன் மாணவன்
4. உண்மை பேசுபவன் மாணவன் பொறுமை கொள்பவன் மாணவன்.

## மொழியோடு விளையாடு

### 1. பாரதிதாசனின் பாடலில் வரும் வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக.

1. பனிமலர்
2. கனியிடை
3. கழையடை

AAMS KOSAVAPATTY

4. நனிபசு

5. பாசிடை

6. குளிரின நீர்

## 2. கீழ்வரும் குறுக்கெழுத்து புதிரில் உள்ள வினாக்களுக்குச் சிந்தித்துச் சரியான விடையைக் கண்டுபிடி.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 நா | 1 க | | | | 2 பா | | |
| | | | | | | | | |
| | | | 2 த | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | 3 இ | | | | | 3 பா |
| 2 பா | 1 இ | | | | | | 1 தொ | |

### கீழிலிருந்து மேல்

1. தமிழ் மொழியின் முதல் இலக்கண நூல் தொல்காப்பியம்
2. பாரதிதாசன் இவர் மேல் பற்று வைத்திருந்தார் பாரதியார்
3. புதுவையில் தோன்றிய புதுமைப் பாவலர் பாரதிதாசன்.

### மேலிருந்து கீழ்

1. பாரதிதாசனின் தந்தையின் பெயர் கனகசபை
2. பாரதியார் எழுதிய பாடலில் ஒன்று பாப்பா பாட்டு
3. முத்தமிழ் என்பது இயல், இசை நாடகம்

இடமிருந்து வலம்

1. உடலுக்கு குளிர்ச்சி தருவது இளநீர்

2. உலகின் முதன் மொழி மூத்த மொழி தமிழ்

3. தமிழ் என்னம் சொல்லுக்குரிய பொருள் இனிமை

3. குறிப்புகளைக் கொண்டு விடைகளைக் கண்டுபிடி

(காந்தம், அன்னை, பள்ளம், அச்சாணி, பகிர்ந்து, ஔவையார்)

1. உருண்டோடும் பெரிய தேரைக் காப்பது அதன் சிறிய அச்சாணி ஆகும்.

2. இரும்பை இழுக்கும் சக்தி கொண்டது காந்தம்

3. அம்மா வேறு சொல் அன்னை

4. ஆத்திசூடி எழுதிய பெண்பாற் புலவர் ஔவையார்

5. எதிர்ச் சொல் தருக மேடு பள்ளம்

6. காகம் தனக்குக் கிடைத்த உணவைப் பிற காகங்களோடு பகிர்ந்து உண்ணும்

7. உன் விடைகளின் மூன்றாவது எழுத்துகளை வரிசைப்படுத்தினால், எதிர்காலத்தில் நீ யாராக இருப்பாய் எனத் தெரியும் சாதனையாளர்.

4. சொல்லிலிருந்து புதிய சொற்ள் உருவாக்குக.

1. புதுக்கவிதை - கவி, புவி, புது, கவிதை, கதை, தை, விதை

AAMSKOSAVAPATTY

2. நெல்லிக்கனி - நெல், கனி, நெல்லி,

3. கற்குவியல் - கவி, கயல், குவியல், கல், குவி

5. சொற்களைக் கொண்டு புதிய தொடர்களை உருவாக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| அகிலா | படித்தாள் | நான் | பாடம் | வீட்டிற்கு |
| சென்றாள் | படித்தேன் | சென்றேன் | வந்தாள் | பள்ளிக்கு |

1. அகிலா பாடம் படித்தாள்
2. நான் பாடம் படித்தேன்.
3. அகிலா வீட்டிற்கு சென்றாள்.
4. அகிலா பள்ளிக்கு வந்தாள்.
5. அகிலா வீட்டிற்கு சென்றேன்.

AAMS KOSAVAPATTY